**ஜனவரி – 08**

# TNPSC துளிகள்

- உத்தரப் பிரதேசத்தில் உள்ள சாஹிபாபாத்தை டெல்லியில் உள்ள புதிய அசோக் நகருடன் இணைக்கும் டெல்லி-மீரட் பிராந்திய விரைவுப் போக்குவரத்து அமைப்பின் (RRTS) 13 கிலோ மீட்டர் நீளப் பிரிவினைப் பிரதமர் திறந்து வைத்தார் (டெல்லி மெட்ரோ ரயில்).
- வியட்நாமின் தலைநகர் ஹனோய் நகரானது, சமீபத்திய வாரங்களாக அடர்ந்த புகைப் பனி மூட்டத்தால் சூழப்பட்டுள்ளதால், உலகின் மிகவும் மாசுபட்ட நகரங்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- மேற்கு வங்காள மாநில அணியானது, இந்தியாவின் தலைசிறந்த மாநில அளவிலான கால்பந்துப் போட்டியான சந்தோஷ் கோப்பை போட்டியில் 33வது முறையாக வெற்றி பெற்றுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழக ஆளுநர் உரை 2025



- தமிழக ஆளுநர், புத்தாண்டின் முதல் கூட்டத் தொடருக்கான வழக்கமான உரையைப் படிக்காமல் சட்டப் பேரவையிலிருந்து வெளியேறினார்.
- 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல், தமிழ்நாடு சட்டமன்றத்தின் வழக்கத்தின் படி, ஆளுநர் உரையின் தொடக்கத்தில் மாநில கீதமும், முடிவில் தேசிய கீதமும் இசைக்கப் படுகின்றன.
- மாநில அரசு தயாரித்த ஆளுநர் உரையின் தமிழாக்கத்தினை சபாநாயகர் M.அப்பாவு வாசித்தார்.
- ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட உரையை மட்டுமே பதிவாக எடுத்துக் கொள்வதற்கான தீர்மானத்தினை சபை ஏற்றுக் கொண்டது.

## கிராம ஊராட்சிகளுக்கான சிறப்பு அலுவலர்கள்


- தமிழ்நாடு அரசு மாநிலத்தில் உள்ள 9,624 கிராமப் பஞ்சாயத்துகள், 314 பஞ்சாயத்து ஒன்றியங்கள் மற்றும் 28 மாவட்டப் பஞ்சாயத்து அமைப்புகளுக்கு வேண்டிய சிறப்பு அதிகாரிகளை (SO) நியமித்துள்ளது.
- ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் (RLBs) தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பதவிக்

காலம் ஆனது ஜனவரி 05 ஆம் தேதியுடன் முடிவடைந்ததைத் தொடர்ந்து இந்த முடிவு என்பது மேற்கொள்ளப்பட்டது.

- அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களின் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (BDO - கிராமப் பஞ்சாயத்துகள்) அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் சிறப்பு அதிகாரிகளாக நியமிக்கப் பட்டுள்ளனர்.
- அதே போல், அந்தந்த மாவட்டங்களில் உள்ள RD&PR துறையில் உள்ள (பஞ்சாயத்துகள்) மற்றும் (தணிக்கை) பிரிவுகளின் உதவி இயக்குநர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு SO அதிகாரிகளாக பணியாற்றுவார்கள்.
- இதில் மாவட்ட ஊரக மேம்பாட்டு முகமைகளின் கூடுதல் ஆட்சியர்கள் அல்லது கூடுதல் இயக்குநர்கள் அல்லது இணை இயக்குநர்கள் அல்லது திட்ட இயக்குநர்கள் மாவட்டப் பஞ்சாயத்து அமைப்புகளுக்கான சிறப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு உள்ளனர்.

| Office/seat | Number of vacancies |
|---|---|
| Village Panchayat president | 9,624 |
| Village Panchayat ward member | 76,746 |
| Panchayat Union Chairperson | 314 |
| Panchayat Union ward member | 5,090 |
| District Panchayat chairperson | 28 |
| District Panchayat ward member | 515 |
| TOTAL | 92,317 |

## விழுப்புரம் அருகே சங்க காலக் குடியிருப்பு கண்டுபிடிப்பு




- விழுப்புரம் அருகே சங்க காலத்தைச் சேர்ந்த மனிதக் குடியிருப்புகள் / வாழ்விடங்கள் இருந்ததற்கான தொல்லியல் சான்றுகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- அங்குள்ள அய்யன்கோயில்பட்டு மற்றும் தென்னமாதேவி - ஆனைமேடு ஆகிய இடங்களில் பம்பை ஆற்றின் கரையில் இந்த சான்றுகள் கிடைத்துள்ளன.

- தென்னமாதேவி-ஆனைமேடு கலாச்சார வாழ்விடப் பகுதியானது சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் 500 முதல் 600 மீட்டர் நீளம் வரை நீண்டுள்ளது.
- அய்யன்கோயில்பட்டில் உள்ள இந்த மேட்டுப் பகுதியானது 15 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் பரவியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## ஹோட்டன் மாகாணம்


- இந்திய அரசானது, சீனாவின் ஹோட்டன் மாகாணத்தில் ஹீ'ஆன் மற்றும் ஹெகாங் ஆகிய இரண்டு புதிய மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டதற்காக சீனாவிற்கு கண்டனம் தெரிவித்துள்ளது.
- மாவட்டங்கள் என்று அழைக்கப்படும் இந்தப் பகுதிகளின் அதிகார வரம்பு ஆனது, இந்தியாவின் ஒன்றியப் பிரதேசமான லடாக் பகுதியினையும் உள்ளடக்குகிறது.
- ஹோட்டன் மாகாணம் என்பது சீனாவின் தென்மேற்கு சின்ஜியாங்கில் உள்ள ஒரு நிர்வாகப் பிரிவு ஆகும்.
- முன்னதாக 2017 ஆம் ஆண்டு சீனாவானது அருணாச்சலப் பிரதேசத்தில் உள்ள ஆறு இடங்களுக்கான 'தரப்படுத்தப்பட்ட' பெயர்களின் ஆரம்பப் பட்டியலை வெளியிட்டது.
- 2021 ஆம் ஆண்டில், 15 இடங்களைக் கொண்ட இரண்டாவது பட்டியலை அந்த நாடானது வெளியிட்டது, என்ற நிலையில் 2023 ஆம் ஆண்டில் 11 கூடுதல் இடங்களின் பெயர்களைக் கொண்ட மற்றொரு பட்டியல் வெளியிடப் பட்டது.




## இணைய வழி நீதிமன்றத் திட்டத்தின் மூன்றாம் கட்டம்

- மத்திய அமைச்சரவையானது, 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், இதில் 7,210 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் இணையவழி நீதிமன்றத் திட்டத்தின் மூன்றாம் கட்டத்திற்கு (2023-2027) ஒப்புதல் அளித்துள்ளது.
- இது இந்திய நீதித்துறையின் நவீனமயமாக்கல் மற்றும் மேம்பாட்டிற்காகத் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பத்தினை (ICT) நன்கு மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு முதன்மை முயற்சியாகும்.

- அதன் சில எண்ணிம நடவடிக்கைகள்,
    - நீதிமன்ற நடவடிக்கைகளை எண்ணிம மயமாக்குவதற்கு எண்ணிம மற்றும் காகிதமில்லா நீதிமன்றங்களை நிறுவுதல்.
    - மரபார்ந்தப் பதிவுகள் மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகள் உட்பட நீதிமன்றப் பதிவுகளின் விரிவான எண்ணிமமயமாக்கல்.
    - நீதிமன்றங்கள், சிறைகள் மற்றும் மருத்துவமனைகளுக்கு காணொளி வாயிலான வழக்காடல் வசதிகளை விரிவுபடுத்துதல்.
    - போக்குவரத்துசார் விதிமீறல்களை தீர்ப்பதற்கு வேண்டி இயங்கலை வழியிலான நீதிமன்றங்களின் நோக்கெல்லையினை விரிவுபடுத்துதல்.




## சர்வதேசச் செய்திகள்

### ஜஸ்டின் ட்ரூடோ ராஜினாமா




- ஜஸ்டின் ட்ரூடோ தனது கனடிய நாட்டின் சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியை ராஜினாமா செய்து விட்டதோடு, கனடாவின் பிரதமராக தனது ஒன்பது ஆண்டு பதவிக் காலத்தினையும் நிறைவு செய்துள்ளார்.

- 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற கூட்டாட்சித் தேர்தலில் சுதந்திரக் கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்ற இவர் அந்த ஆண்டின் நவம்பர் 04 ஆம் தேதியன்று பதவி ஏற்றார்.
- கனடாவின் வரலாற்றில் இரண்டாவது இளம் பிரதமர் ஆனார்.
- இவர் கனடாவின் 23வது பிரதமர் மற்றும் முன்னாள் பிரதமர் பியர் எலியட் ட்ரூடோவின் மகன் ஆவார்.

# பொருளாதாரச் செய்திகள்

## BAANKNET வலைதளம்


- அரசாங்கம் ஆனது, புதுப்பிக்கப்பட்ட 'பேங்க்நெட்' எனப்படும் இணைய வழி ஏல வலை தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- பொதுத் துறை வங்கிகளால் (PSBs) இணைய வழி ஏலத்திற்கு என முன் வைக்கப்படும் அனைத்து சொத்துக்கள் பற்றிய தகவலை இது ஒருங்கிணைக்கும்.
- இந்த வலைதளம் ஆனது, ஏலத்தில் வாங்குபவர்களும் முதலீட்டாளர்களும் மிகப் பரந்த அளவிலான சொத்துக்களை ஒரே இடத்தில் கிடைக்கப் பெறச் செய்வதற்கான இடம் ஆகும்.
- இந்த வலை தளமானது, சொத்துக்களின் இணைய வழி ஏலங்களைக் கண்டறிந்து அதில் பங்கு பெறும் செயல்முறையை எளிதாக்கி, சொத்துக்களை வாங்குபவர்களும் அவற்றின் முதலீட்டாளர்களும் மதிப்பு மிக்க வாய்ப்புகளை எளிதாகக் கண்டறிய உதவுகிறது.

## இந்திய ரிசர்வ் வங்கியின் நிதி நிலைத்தன்மை அறிக்கை - டிசம்பர் 2024

- இந்திய வங்கிகளின் மொத்த வாராக் கடன்களின் (GNPA) விகிதம் ஆனது 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் மொத்த முன்பணத்தில் 2.6% ஆகக் குறைந்தது.
- இது கடந்த 12 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு குறைந்த அளவாகும்.
- இதில் நிகர NPA விகிதம் ஆனது தோராயமாக 0.6% ஆக இருந்தது.
- 2024-25 ஆம் ஆண்டின் முதல் பாதியில், பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் இலாபம் அதிகரித்தது என்ற நிலையில் வரிக்குப் பிந்தைய இலாபம் (PAT) ஆனது ஆண்டிற்கு


22.2% அதிகரித்து ள்ளது.

- பொதுத்துறை வங்கிகள் (PSBs) மற்றும் தனியார் துறை வங்கிகள் (PVBs) ஆகியவை முறையே 30.2% மற்றும் 20.2% PAT வளர்ச்சிப் பதிவாகியுள்ளது.
- வெளிநாட்டு வங்கிகளில் (FBs) 8.9% என்ற மிதமான வளர்ச்சி பதிவாகியுள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## இஸ்ரோவின் CROPS பரிசோதனை




- இஸ்ரோவின் PSLV-C60 திட்டத்தில் விண்வெளிச் சுற்றுப்பாதையில் தாவர வளர்ச்சி குறித்த ஆய்வுகளுக்கான குறு ஆராய்ச்சி மாதிரியினை (CROPS) உருவாக்கி மிகவும் ஒரு குறிப்பிடத் தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- இதில் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட காராமணி விதைகளில் வெற்றிகரமாக முதல்

துளிர்கள் முளைத்துள்ளன.

- இது நுண்ணிய ஈர்ப்பு விசைக்கான சூழ்நிலைகளில் தாவர வளர்ச்சி பற்றி மிக நன்கு புரிந்து கொள்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது.
- CROPS பரிசோதனையானது, விண்வெளியின் தனித்துவமான சூழலில் தாவரங்கள் அவற்றை எவ்வாறு தகவமைத்துக் கொண்டு வளர்கின்றன என்பதை ஆய்வு செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின் முதல் விண்வெளி தானியங்கிக் கை செயல்முறை விளக்கம்




- இஸ்ரோ தனது முதல் விண்வெளி தானியங்கிக் கையின் மீதான ஒரு செயல் முறை விளக்கத்தினை விண்வெளியில் உள்ள POEM4 என்ற தளத்தில் மிகவும் வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இது வேற்றிட அமையத்தகு எந்திர கையாளுதல்-தொழில்நுட்ப செயல் விளக்கம் (RRM-TD) எனப்படுகிறது.
- RRM-TD என்பது ஓரிடம் விட்டு வேறிடத்திற்கு நகரும் திறன் கொண்ட இந்தியாவின் முதல் விண்வெளி எந்திர கையாளுதல் திறனாகும்.


# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## IPBES நெக்ஸஸ் அறிக்கை

- இந்த அறிக்கையானது பல்லுயிர்ப்பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் சேவைகள் (IPBES) மீதான அரசுகளுக்கிடையேயான தளத்தினால் வெளியிடப்பட்டது.
- பல்லுயிர்ப்பெருக்கம், நீர், உணவு மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்புகள் பற்றிய ஒரு மதிப்பீட்டு அறிக்கையானது நெக்ஸஸ் அறிக்கை என்றும் அழைக்கப் படுகிறது.
- கடந்த 30-50 ஆண்டுகளில் பதிவான பல்லுயிர்ப்பெருக்க வீழ்ச்சி ஒரு தசாப்தத்திற்கு 2-6% ஆகும்.
- அதிகரித்து வரும் தொற்று நோய்களில் சுமார் 50% ஆனது, சுற்றுச்சூழல் அமைப்பு, விலங்கு மற்றும் மனித ஆரோக்கியம் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புகளால்


உருவாகின்றன.

- தற்போதையப் பொருளாதார நடவடிக்கைகளின் கணக்கிடப்படாதச் செலவினங்கள் ஆண்டிற்கு குறைந்தது 10-25 டிரில்லியன் டாலர் ஆகும்.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## அணுசக்தி அறிவியலாளர் சிதம்பரம்




- மூத்த அணுசக்தி அறிவியலாளர்/ விஞ்ஞானியான தமிழ்நாட்டினைச் சேர்ந்த டாக்டர் இராஜகோபால சிதம்பரம் காலமானார்.
- இவர் இந்தியாவின் அணு ஆயுதத் திட்டத்தில் முக்கியப் பங்காற்றினார்.
- 1974 ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் அணுகுண்டுச் சோதனை மற்றும் 1998 ஆம் ஆண்டில் பொக்ரான்-II சோதனைகளில் அவர் முக்கியப் பங்கு வகித்தார்.
- சர்வதேச அணுசக்தி முகமையின் (IAEA) ஆளுனர் குழுவின் தலைவராகவும் இவர் இருந்தார்.

- இவர் 1975 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ மற்றும் 1999 ஆம் ஆண்டில் பத்ம விபூஷன் ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

# முக்கிய தினங்கள்

## போர்களால் ஆதரவிழந்தவர்களுக்கான உலக தினம் - ஜனவரி 06




- போரினால் பெற்றோரை இழக்கும் குழந்தைகள் எதிர்கொள்ளும் பல இன்னல்களை இந்தத் தினம் அங்கீகரிக்கிறது.
- உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான குழந்தைகள் மோதல்கள், பருவநிலை மாற்றம், புலம்பெயர்வு மற்றும் வறுமை ஆகியவற்றின் பேரழிவுத் தாக்கங்களை எதிர் கொண்டு, அவர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சிறந்த எதிர்காலத்திற்கான வாய்ப்புகளை இழக்கின்றனர்.
- இந்த நாள் என்பது முக்கிய நடவடிக்கைக்கான ஒரு உலகளாவிய அழைப்பாகச் செயல்படுவதோடு, பாதிக்கப் படக் கூடிய நிலையில் உள்ள குழந்தைகளுக்கு நலன், கல்வி மற்றும் பாதுகாப்பை வழங்குவதற்கான கூட்டு முயற்சிகளை வலியுறுத்துகிறது.
- 2023 ஆம் ஆண்டின் இறுதியில், மோதல் மற்றும் வன்முறை காரணமாக தோராயமாக 47.2 மில்லியன் குழந்தைகள் இடம் பெயர்ந்துள்ளனர்.

# இதரச் செய்திகள்


## மெத்தில்கோபாலமின் குறித்த FSSAI அமைப்பின் தெளிவாக்கம்

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர ஆணையம் ஆனது, B12 வைட்டமினின் ஒரு வடிவமான இந்த மெத்தில்கோபாலமினை, உடல்நலத்திற்கான ஊட்டக் குறைநிரப்பு மருந்துகள், மருத்துவ நோக்கங்கள் மற்றும் ஊட்டச்சத்து மருந்துப் பொருட்களில் பயன்படுத்துவது குறித்து தெளிவுபடுத்தியுள்ளது.
- 2022 ஆம் ஆண்டிற்கான FSSAI விதிமுறைகளின் படி அனுமதிக்கப்பட்ட வைட்டமின் B12 வடிவங்களில் தற்போது சயனோகோபாலமின் மற்றும் ஹைட்ராக்ஸோகோபாலமின் ஆகியவை அடங்கும்.

- வைட்டமின் B12 என்பது ஒரு முக்கியமான நீரில் கரையக்கூடிய வைட்டமின் ஆகும் என்பதோடு இது டிஎன்ஏ தொகுப்பு, இரத்தச் சிவப்பணு உற்பத்தி மற்றும் நரம்பியல் செயல்பாடு ஆகியவற்றில் ஒருங்கிணைந்த ஒன்றாகும்.
- இந்த வைட்டமின் குறைபாடு கடுமையான உடல்நல விளைவுகளுக்கு வழி வகுக்கும், எனவே இதற்காகப் பெரும்பாலும் ஊட்ட குறைநிரப்பு மருந்துகள் தேவைப் படுகிறது.




## இந்தியாவின் பீட்டா தலைமுறையின் முதல் குழந்தை




- ஜனவரி 01 ஆம் தேதியன்று நள்ளிரவு 12:03 மணிக்கு மிசோரமில் உள்ள ஐஸ்வாலில் பிறந்த பீட்டா தலைமுறையின் முதல் குழந்தையாக பிரான்கி ரெம்ருதிகா ஜாடெங் பிறந்தார்.
- ஆஸ்திரேலிய எதிர்காலவாதியான மார்க் மெக்ரிண்டில் என்பவர் இந்தச் சொல்லினை உருவாக்கினார்.
- இந்த பீட்டா தலைமுறையில் 2025 மற்றும் 2039 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பிறந்த குழந்தைகளும் அடங்கும்.
- இந்த நபர்கள் மில்லினியல்கள் (தலைமுறை Y) மற்றும் பழைய ஜென் Z பெற்றோரின்

சந்ததிகளாக இருப்பார்கள்.

- 2035 ஆம் ஆண்டில், உலகளாவிய மக்கள்தொகையில் பீட்டா தலைமுறையின் பெரும் பங்கானது 16% ஆக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுவதோடு இது எதிர்காலச் சமூக மற்றும் பொருளாதார நிலப்பரப்பில் அவர்களின் மிகப்பெரும் குறிப்பிடத்தக்கதொரு பங்கைப் பிரதிபலிக்கிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★